RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI:10.34256/irjt22354

# எடுத்துரைப்பியல் நோக்கில் சிலப்பதிகாரக் கிளைக்கதைகள்

பா. ரவி [அ, *], தி.கு. இரவிச்சந்திரன் [ஆ]

[அ] தமிழ்த்துறை, அரசு ஆடவர் கலைக்கல்லூரி, கிருஷ்ணகிரி-635001, தமிழ்நாடு, இந்தியா

[ஆ] தமிழ்த்துறை புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி-605014, தமிழ்நாடு, இந்தியா

# Silapathikaram sub-stories towards Narratology

**P. Ravi [a, *], T.K. Ravichandran [b]**

[a] Department of Tamil, Government Arts college for Men, Kirshnagiri-635001, Tamil Nadu, India

[b] Department of Tamil, Pondicherry University, Puducherry - 605014, Tamil Nadu, India

* Corresponding Author:
ravi2sumi@gmail.com

Received: 08-05-2022
Revised: 11-07-2022
Accepted: 17-07-2022
Published: 30-07-2022

Check for updates

**ABSTRACT**

This is the time when many multidisciplinary studies in Tamil language are developing. Interdisciplinary studies and studies based on different theoretical approaches are significant. In this way the rhetorical approach also acquires an element of elimination. This can be referred to as the 2000-evolved approach in our language. Among those who explained this approach, according to research method, K. Panchagam also p. Maruthanayak is also the foremost. The study of rhetoric in the Melaynad begins with long narrative songs and novels. This pattern can also be found in Tamil literature. This is evidenced by the books, copies, story songs and Ammanai literature in Tamil. Such elements abound in Silapathikaram, the primary copy among the copies. The purpose of this article is to explain the elements of narration such as the course, time, order, duration of the event, sequence of events, etc.

**Keywords:** Silapathikaram, Ammanai literature, Tamil language, Tamil literature

## முன்னுரை

இலக்கியம் என்பது படைப்பாளிக்கும், வாசகருக்கும் இடையிலான தொடர்பாடலுக்கான ஊடகம். எடுத்துரைப்பியல் படைப்பாளியையோ, வாசகரையோ கருத்தில் கொள்வதில்லை. பதிலாக, படைப்புகளில் இருந்தே உட்கிடையான படைப்பாளியையும் உட்கிடையான வாசகரையும் எடுத்துரைப்பியல் கருத்தில் கொள்கிறது. இதன் மூலம் இவ்வகைத் திறனாய்வு படைப்பாளியையோ வாசகரையோ மையப்படுத்தாமல் படைப்பின் உரையையோ மையப்படுத்துவதாக உள்ளது. சிலம்பில் இளங்கோவடிகள் கையாண்டுள்ள எடுத்துரைப்பியல் நுட்பத்தை இக்கட்டுரை வழிக் காண்போம்.

## காப்பியம்

சங்க காலம் தமிழகத்தின் வீரயுகம் ஆகும். வீரயுகக் காலச் சமுதாயச் சூழல் காப்பியங்கள் தோன்ற காரணமாக அமைந்துள்ளன. "காவியங்கள் ஒரு நாட்டில் தோன்ற வேண்டுமானால் அந்நாட்டு மக்கள் வீரத்தையும் மானத்தையும் போற்றுபவர்களாக இருக்க வேண்டும் என்றும், வீரமும் மானமும் மிக்க தலைமகனைச் சிறப்பித்துப் பாடப்படும் மரபு இருக்க வேண்டும் என்றும் கூறுவர். பழந்தமிழ் மக்களுக்கு இந்தப் பண்பும்; இயல்பும் இருந்தன என்பதில் ஐயமில்லை என்பர்.

காப்பியம் என்ற சொல்லுக்கு மேலை இலக்கியச் சொல் அகராதி பின்வரும் விளக்கம் தருகிறது. ஆங்கில சொல்லான Epic என்பதும் epo என்ற கிரேக்கச் சொல்லின் ஆக்கமாகக் கருதப்படுகிறது. 'Epo' என்றால் 'to tell' என்றும் 'epos' என்றால் 'anything to tell' என்றும் பொருள்படும். (Sachithanandan, 1983) எனவே Epic என்பது மரபு வழியாகச் சொல்லப்பட்டு வருவது என்பது பொருளாகிறது பிறகு அது "சொற்பொழிவு" அல்லது "கதை" "பாடல்" என்பதைக் குறிக்க பயன்பட்டு, இறுதியில் "வீரம் செறிந்து வரலாறு" அல்லது கதையைக் குறிப்பிடுவதகிறது. இவ்வகையில் காப்பியம் என்பது பழ மரபுகளை காத்து இயம்புகிறது.

தான் சார்ந்துள்ள இனம் அல்லது சமுதாயம் மனித இனம் ஆகிய இவற்றின் விதியையே தீர்மானிக்கும் அளவுக்கு எவன் ஒருவனது செயல்கள் பாதிப்பை ஏற்படுத்துகின்றனவோ, அந்த ஒரு தன் நிகர் இல்லா தனிப்பெரும் தலைவனைக் கதை மையமாகக் கொண்டு உயர்ந்த நடையில் விவரிக்கப்படுகிற, மென்மையான, தரமான பாட்டுடை பொருளைப் பெற்றுள்ள, நீண்ட தொடர்நிலைச் செய்யுளாக வரும் பாடலுக்கு காப்பியம் என்ற பெயர்.

## சிலப்பதிகாரம்

தேனிலே ஊறிய செந்தமிழின் சுவைதோறும் சிலப்பதிகாரம்" என்கிறார் கவிமணி தேசிக வினாயகம் பிள்ளை. சிலப்பதிகாரம் பற்றி ஜெயமோகன், "அது (சிலப்பதிகாரம்) ஒரு முழுமையான காப்பியம். முழுமையான காப்பியம் என்பதன் அடையாளம் அது நான்கு வகையில் முழுமை கொண்டதாக இருக்கும் என்பதே. ஒன்று அது. அது உருவான சமூகத்தின் வரலாறாகவும் இருக்கும். இரண்டு, அது ஒரு பண்பாட்டுக் களஞ்சியமாக இருக்கும். மூன்று அது ஒரு உணர்ச்சிச்செறிவான மானுடக் கதையாக இருக்கும். நான்காவதாக ஏதோ ஒருவகையில் அது ஒரு மெய்ஞானநூலாகவும் இருக்கும். சிலப்பதிகாரத்துக்கு இந்தக்குணங்கள் அனைத்தும் உண்டு என்கிறார். இறைவன், முடியுடை வேந்தன், நிகரற்ற தீரச் செயல்களை செய்த தலைவன் ஆகியோருள் எவரையேனும் பாட்டுடைத் தலைவனாக கொண்டு இலக்கியம் படைப்பது மரபு. ஆனால் இளங்கோ அவர்கள் வணிகக் குடி மக்களாகிய கோவலன், கண்ணகியை வைத்து காப்பியம் இயற்றியுள்ளார் (Elangovadigal, 2013).

## கிளைக்கதைகள் வரையறை

உலகில் காப்பிய சார்ந்த நூல்களை சிலரே அறிவர். இருப்பினும் காப்பியக் கதைகள் அனைவரும் அறித்தே. வையம் அறிந்த இக்காப்பியக் கதைகள், பல கிளைக் கதைகளை தம்முடன் இணைத்து ஒருசேர வடிவமாக காட்சி அளிக்கின்றன. காப்பியக் கதையை மையக்கதை, கிளைக்கதை, துணைக்கதை என மூன்று வகையாக வகைப்படுத்தலாம் (Muthu shanmugan & Perma, 2014).

மையக்கதை என்பது காப்பிய முதன்மை மாந்தர்கள் பற்றியே அமைந்திருக்கும். இது பெரும்பாலும் விளக்கமுறையில் சொல்லப்பட்டிருக்கும். இந்த மூல கதையின் ஆரம்பமே காப்பியத்தின் ஆரம்பமாகும், மூல கதையின் இறுதியே காப்பிய இறுதியாகவும் அமைந்திருக்கும். தவிர, மையக்கதை, தொடக்கம், வளர்ச்சி, உச்சகட்டம் வீழ்ச்சி, முடிவு என்ற ஐந்து உறுப்புகளை கொண்டிருக்கும் (Muthushanmugan, 2014).

கிளைக்கதை மையக்கதையின் உட்கிடைந்த கதை வடிவமே (story form) ஆகும். கிளைக் கதைகள் கூற்று முறையில், அதாவது விவரிப்புப் போக்கில் அமைந்திருக்கும் என்பது குறிப்பிடத்தக்கதாகும். கிளைக்கதை என்பது காப்பிய மையக் கதையுடன் இணைந்த, அதாவது ஒன்றிய கதையாகவே வர வேண்டும் என்கிறார் அரிஸ்டாட்டில்.

## எடுத்துரைப்பியலும் திறனாய்வாளார்களும்

எடுத்துரைப்பியல் என்பது எடுத்துரைப்பை ஓர் இலக்கிய வகையாக பயில்வதாகும். இதன் நோக்கம் எடுத்துரைப்பில் நிலைத்திருப்பவை, மாறுபவை, சேர்ந்திருப்பவை ஆகியவற்ற விவரிப்பதும் எடுத்துரைப்புப் பனுவல்கள் அதன் வகை மாதிரிப் படிவங்களுடன் கொண்டிருக்கும் தொடர்பினைக் கொள்கை ரீதியாக விளக்குவதாகும். மேலும் எடுத்துரைப்பில் என்பது மரபு ரீதியாக இலக்கிய ஆய்வின் துணை அறிவுத் துறையாக (Sub-Disipline) விளங்குகிறது.

குறிப்பாகக் கவிதையில், இலக்கிய வகைக் கோட்பாடு, இலக்கியக் குறியியல் ஆகியவற்றுடன் நெருங்கிய உறவு கொண்டுள்ளது. இலக்கிய வகைக் கொள்கையைப் போலவே எடுத்துரைப்பில் கொள்கையும் தன்னுணர்ச்சிப்பா, நாடகம், காப்பியம் ஆகியவற்றுக்கிடையே வேறுபாடுகளைக் கருத்தில் கொள்கின்றது. ஆனால் அத்துடன் எடுத்துரைப்பு வகையின் வகைமாதிரிப் படிவம் (Typologic) வரலாற்றில் அடிக்கருத்தியல் சார்ந்த பிரச்சினைகளைக் குவிமையப்படுத்துகின்றது என்று விளக்கியுள்ளார் மோனிகா ஃப்ளுடர்னிக் (Siva, 2020).

எடுத்துரைப்பில் என்பது பனுவல்கள் எவ்வாறு கட்டமைக்கப்பட்டுள்ளன, இவற்றின் கட்டமைப்புத் தன்மையினால் எவ்வாறு கதை வெளிப்படுத்தப்படுகின்றது என்பதை விளக்கமாக ஆராய்கின்றது. பனுவலுக்குள் ஊடாடுகின்ற மொழியை அறிவியல் பூர்வமாக ஆராய்ந்து பனுவலின் இயக்கத்தை அது வெளிப்படுத்தும் நுட்பத்தை அறியச் செய்வதில் எடுத்துரைப்பில் முக்கியமானதொரு பங்கை ஆற்றுகின்றது. எடுத்துரைப்பில் என்பது ஒரு செய்தியை எடுத்துச் சொல்கிற ஒரு வகையான தகவல் தொடர்பு முறையியலைக் குறிக்கிறது (Pajanivelou, 2020).

## எடுத்துரைப்பின் அலகுகள்

எடுத்துரைப்பின் அடிப்படை அலகுகளாகக் க. பஞ்சாங்கம் அவர்கள் மூன்றினைக் குறிப்பிடுகிறார். அவை

1. நிகழ்ச்சிகள்
2. நிகழ்ச்சிகளுக்கான வார்த்தை குறியீடுகள்
3. எடுத்துச் சொல்லும் அல்லது எழுதும் செயல்பாடு

ஆகிய இம்மூன்றுமாம். இவற்றைப் புனைக்கதை எடுத்துரைப்பு நோக்கில் (Narrative Fiction) பின்வருமாறு மறுபெயரிட்டு அழைக்கப்படுகின்றன.

1. கதை (Story)
2. பனுவல் (Text)
3. எடுத்துரைப்பு (Narration)

இவற்றுள் ‘கதை’ என்பது தொடர் நிகழ்ச்சிகளாக அமைந்திருக்கின்றது. ‘பனுவல்’ என்பது அந்நிகழ்ச்சிகளைக் கேட்பதன் மூலம் ஒரு சொல்லாடலைக் கட்டமைக்கின்றது. (சொல்லாடல் (Discourse) என்பது குறிப்பிட்ட நோக்கில் அனைத்தையும் ஒழுங்குபடுத்தும் செயல்பாடு) எடுத்துரைப்பு என்பது பனுவலை உருவாக்கும் செயல்பாட்டுப் படிமுறை ஆகும். இந்த மூன்றும் ஒன்றை ஒன்று சார்ந்து இயங்கும்போதுதான் புனைவு இலக்கியங்கள் சாத்தியமாகின்றன (Panchangam, 2017).

## பனுவலும் காலமும்

இலக்கியம் வெற்றுவெளியிலிருந்து தோன்றுவதில்லை, குறிப்பிட்ட காலத்தின் பின்னணியில், குறிப்பிட்ட காலத்தைச் சேர்ந்த படைப்பாளியினால் படைக்கப்படுகின்றது (Natarajan,

2022). காலம் என்பது கதையை உருவாக்கக்கூடிய நிகழ்சிகளைப் பனுவலாக ஒழுங்குமுறைப்படுத்துகிறது. புகழ்பெற்ற புனைகதைகள் பலவற்றில் இந்த காலம் என்பது திரும்பத் திரும்ப நிகழ்கின்ற ஒரு கருவியாக கூட தொடர்கிறது. மேலும் சொல்லுகின்ற கருவியாகிய மொழியை வடிவமைப்பதும் கூட காலம் தான். எனவே எடுத்துரைபியலில் பனுவல் - காலம் என்ற ஒரு கோணம் முக்கிய இடம் பெறுகிறது. இக்காலமானது எடுத்துரைத்தலில் மூன்று வகையான முறையில் பார்க்கப்படுகின்றது.

1. ஒழுங்கு (Order)
2. நிகழ்ச்சி நடக்கும் கால அளவு (Duration)
3. தொடர் நிகழ்வு ( Frequency)

ஒரு பனுவலை இந்தக் கோணத்தில் அலசத் தொடங்கும் போது எடுத்துரைப்பின் ஆற்றல் வாய்ந்த செயல்பாட்டினைப் புரிந்து கொள்ளலாம் (Panchangam, 2016).

## நிகழ்ச்சிகளின் ஒழுங்கு

ஒழுங்கு என்பது எப்பொழுது என்ற வினாவிற்குக் கிடைக்கக்கூடிய விடையிலிருந்து பெறப்படுகிறது. அதாவது ஒரு பக்கத்தில் முன் நிகழ்ச்சியின் இடையோட்ட நிகழ்வு அல்லது பின்னோக்கு என்ற முறையிலும் மற்றொரு பக்கத்தில் முன் கருதுதல் அல்லது முன் குறித்துக் காட்டுதல் என்றும் சுட்டப்படுகிறது.

ஒழுங்கின் விவரிப்பை விளக்கும் விதமாக சிலப்பதிகாரத்தில் பொற்கைப் பாண்டியன் கதையும் பராசுரன் கதையும் எழுத்தாளப்பட்டுள்ளன. இவ்விரண்டு கிளைக் கதைகளும், பாண்டிய மன்னர்களின் நீதி வழுவா மேன்மையையும் சிறப்பையும் பேச எழுந்தவையாகும். மதுரையின் காவல் தெய்வமான மதராபுரி தெய்வம் கண்ணகிக்கு சொல்வதாக இவ்விரு கதைகள் அமைந்துள்ளன. பாண்டியன் தன் கணவனை ஆராயாது கொன்றான் என்ற சினத்தில் ஊரை எரித்து தணியாது செந்தீயுடன் நின்று கண்ணகிடம், மதுராபுரித் தெய்வம், பாண்டிய மன்னன் குற்றமற்றவன், ‘உன் சினம் தணிக’ என்று உணர்த்துவதற்கு முன்பாக, ஒரு முன்னோடியாக பாண்டியர் குலப் பெருமையும் செங்கோல் சிறப்பையும் பேசும் கதைகளைச் சொல்கிறது.

பொற்கை பாண்டிய மன்னன், வேற்றுநாட்டு சென்ற கிரந்தையின் மனைவிக்கு துணையாக நிற்கும் பொருட்டு அவள் வீட்டு கதவினை தட்ட, அதை உணராத அவள், அரசவேலி தன்னைக் காக்கவில்லையே என புலம்ப, தவறை உணர்ந்த மன்னன் தன் கையை வெட்டி முறை செய்த நிகழ்வும், (Pajanivelou K, 2018) இரண்டாவது கதையான பராசுரன் கதை முறை நிலை திரிந்த அரியா மாக்களின் தவறைப் பேசுகிறது. பின்பு மன்னன் அதை அறிந்து முறை செய்வதையும் கதை விளக்கி நிற்கிறது. ஆக இவ்விரு கிளைக்கதைகளும் பாண்டியன் குற்றமற்றவன் என்பதை விளக்குவதற்காகவும் அவன் குல பெருமை பேசுவதற்காகவும் கோவலன் விதியே அவன் மரணத்திற்கு காரணம் என்பது விளக்குவதற்காகவும் பின்வரும் கிளைக் கதைகளுக்கு அழுத்தம் தருவதற்காகவும் அடிகளால் எழுத்தாளப்பட்டுள்ளன.

## நிகழ்ச்சி நடக்கும் கால அளவு

ஒரு நிகழ்ச்சி நடந்த கால அளவிற்கும் அதனைக் கதையில் சொல்ல எடுத்துக் கொள்ளப்பெறும் கால அளவிற்கும், உள்ள தொடர்பைச் சுட்டுவதற்கு ‘Isochrony’, ‘Anischrony’ என்னும் கலைச்சொற்களை எடுத்துரைப்பியலார்கள் பயன்படுத்துவார்கள்

எவ்வளவு நேரம் என்று வினாவிற்குக் கிடைக்கக் கூடிய விடையாக நிகழ்ச்சி நடக்கும் கால அளவு வந்தமைகிறது. அதிலிருந்து இது வரை என்பது போன்ற காலக்குறிப்புக் கதைகளில்

இடம்பெற்றதால் அது இவ்வகையில் அமையும். கதையில் உள்ள நிகழ்ச்சி காலத்திற்கும் நீளத்திற்கும் இடையே உள்ள உறவு முறையைப் பற்றியதாகும்.

சுருக்கமாகச் சொல்வதென்றால் காலத்திற்கு இடத்திற்குமான உறவு பற்றிய பிரச்சினையாகும். எனவே, ஜெனேத் நிகழ்ச்சி காலத்தை அளப்பதற்கு ஏற்றவையாகக் கதை மற்றும் பனுவலைப் பயன்படுத்துவதைவிட நிலையான வேகம் (Contancy) என ஒன்றைப் பயன்படுத்துமாறு முன்மொழிகிறார்.

இக்காப்பியப் பாவிகத்தில் ஒன்றான 'ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும்' என்னும் வினைக் கோட்பாட்டை விளக்க வந்த கதைதான் கோவலன் முற்பிறப்புக் கதை. இக்கிளைக்கதை கோவலன் வினைப்பயனை கூறவும் கோவலன் கொலை செய்யப்பட்டதற்கான காரணத்தை விளக்கி எடுத்துரைக்கும் விதமாக இளங்கோவால் எடுத்தாளப்பட்டுள்ளது.

கோவலன் கலிங்க நாட்டில் சிங்கப்புரத்தில் பரதன் என்னும் பெயருடையவனாய் இருந்தான் எனவும், சங்கமன் என்னும் வணிகனைப் பகை காரணமாக, அரசனிடம் ஒற்றன் எனக் கூறிக் கொல்வித்தான் என்பதையும் இக்கதை சுட்டுகிறது. சங்கமன் மனைவியான நீலி, 'எம்முறு துயரம் செய்தார், தம்முறு துயரம் கொள்க' என இட்ட சாபமே, கண்ணகி துன்பம் அடைவதற்கான காரணமாக மதுராபுரித் தெய்வம் கூறுவதாக படைக்கப்பட்டுள்ளது (Elangovadigal, 2013). துன்புற்றவன் எவ்வளவு காலம் தான் மகிழ்ந்திருக்க முடியும், ஒரு நாள் அவன் செய்த செயலின் வினைப் பயன் அடைந்தே தீர்வான் என்பதை விளக்கும் விதமாக இக்கதையானது எடுத்தாளப்பட்டுள்ளது. எடுத்துரைப்பின் நிகழ்ச்சி நடத்தும் கால அளவிற்கு பொருந்தும் விதமாக இக்கிளைக் கதையானது பொருந்தியுள்ளது.

## தொடர் நிகழ்வு

தொடர் நிகழ்வு என்பது எத்தனை தடவை என்ற வினாவிற்கு கிடைக்கக்கூடிய விடையின் மூலம் பெறப்படுகின்றது. தொடர் நிகழ்வு என்ற தலைப்பின் கீழ் ஒரு கதையின் நிகழ்ச்சி எவ்வாறு தோன்றுகிறது என்பதற்கும் அந்தப் பனுவலில் அந்த நிகழ்ச்சி எத்தனை தடவை எடுத்துரைக்கப்படுகிறது என்பதற்கும் இடையேயுள்ள உறவை ஆராய்கிறது. தொடர் நிகழ்வு என்பது ஒவ்வொரு நிகழ்வின் போதும் நிகழ்கின்றது புதிய தனி பண்புகளை ஒதுக்கி வைத்துவிட்டு பொதுவான கூறுகளை மட்டும் தக்க வைத்துக் கொள்கிறது.

சிலம்பில் மறை ஓதும் அந்தன முதல்வனான மாடலன் என்பான் கூற்றாக கோவலன் பற்றி மூன்று கிளைக்கதைகள் தொடர் நிகழ்வாக எடுத்தாளப்பட்டுள்ளன. மடக்களிறு அடக்கிய கருணை மறவனாக, ஒல்கா செல்வத்து உறுபொருள் கொடுத்து நல்வழிப்படுத்திய செல்லாச் செல்வனாக, படிற்றுரை கூறிய பாதகனுக்கும் இரங்கி அவன் கிளைஞரின் பசிப்பிணி அறுத்துப் பல்லாண்டு புரிந்த இல்லோர் செம்மலாக கோவலனின் குணநலன்களை, (Elangovadigal, 2013) கூறும் விதமாக இம்மூன்று கிளை கதைகளும் இளங்கோவால் சொல்லப்பட்டுள்ளன.

கோவலன் தன்வாழ்நாளில் செய்த நல்ல செயல்களை, அவனிடமே இன்னொருவர் கூறுவதாகப் படைத்துக் காட்டியிருக்கும் அடிகளின் புலமை நுட்பமும் அறிந்து மகிழத்தக்கதே. "இல்லோர் செம்மலாக, செல்லாச் செல்வனாக, கருணை மறவனாக விளங்கிய நீ, இம்மைப் பிறப்பிலும் நன்மைகளைச் செய்த நீ, மாமணிக் கொழுந்தாகிய கண்ணகியுடன், அறியா நகரில் தனியே நிற்கிறாயே" என காப்பிய தலைவனான கோவலனின் பண்பினை உயர்த்திக் காட்ட இக்கிளைக்கதை தொடர் நிகழ்வாக அடிகள் எடுத்தாண்டுள்ளார். கோவலன் மாதவியுடன் வாழ்ந்த காலத்து நடந்த செயல்களே இங்கு மூன்று கதைகளாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. இளங்கோவடிகள் இம்மூன்று கதைகளையும் கோவலன் கொலைப்படுவதற்கு சற்று முன்பாகவே படைத்து காட்டுகிறார். கோவலன் தன் வாழ்நாளில் செய்த நன்மைகளை அவன் இறப்பிற்குப் பின் காட்டினால் அது 'இறந்தோர் துதி' பாடுவதாக அமைந்துவிடும். ஆகவே அவன் இறப்புக்கு

முன்னரே படைத்துக் காட்டி, இப்படிப்பட்ட நல்லவன் சாகிறான் என்ற நிலையில் தொடர் நிகழ்வாக அடுக்கி வைக்கிறார்.

## முடிவுரை

இக்கட்டுரையின் இறுதியாக பனுவலுக்குள் காணப்படும் உட்கிடையை எடுத்துரைப்பதாக அமையும் எடுத்துரைப்பியலில் அழகியல் ரீதியாக அமைந்த விவரிப்பும் பனுவலும் காலமும் நிகழ்ச்சியின் ஒழுங்கும் நிகழ்ச்சி நடக்கும் கால அளவும் மொழி குறியீடுகளும் சிலப்பதிகாரக் கிளைக் கதைகளில் அமைந்துள்ள பாங்கும் இக்கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளன.

## References


Elangovadigal, (2013) Chilappathikaram, Dr. U. V. Sami Nathaiyer nul nilayam, Chennai, India

Muthu Shanmugan, Perma, R. (2014) Eratti Kappiya Kilai Kathaigalum Thunai Kathaigalum, New Century Book House, Chennai, India

Muthus hanmugan, (2014) Tamil Elakkiya Kotpadugal, New Century Book House, Chennai, India

Natarajan, T.S. (2022) Thiranaivuk Kalai Kolkaigalum Anugumuraigalum, New Century Book House, Chennai, India

Pajanivelou, K, (2018) chilappathikara eduthuraippu kuttrukotpattu nookku, mattru Velittaham, Chennai, India

Pajanivelou, K. (2020), Kotpadugalum Thiranaivum, Annam Pathippagam, Thanjavur, India

Panchangam, K. (2016) illakkiuamum thiranaivukkotpadukalum, Annam Pathippagam, Thanjavur, India

Panchangam, K. (2017 Naveenak Kavithaiyal: Eduthrhuraippiyal, Kaavya Pathippagam, Chennai, India

Sachithanandan, V. (1983) Melai illakkiyac sollagarathi, Macmillam Pathippagam, Chennai, India

Siva, K. (2020) Pathupattin eduthuraippiyal, lakshmi Pathippagam, Thirupattur, India


**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License